ஸ்ரீ ஆண்டவிநாயகர் துணை.

குண நிதி.

திருவிடைமருதூரினின்று வெளியாகும்
ஒரு மாதாந்த செந்தமிழ்ப் பத்திரிகை.

GUNA NIDHI.

மலர் 1.] இரக்தாக்ஷி-௵ ஆடி-௴ ௧௨ [இதழ் 2.

போருளடக்கம்.

	பக்கம்.
1. கடவுள் துதி	... 25
2. குணம்	... 26
3. காழிக்கல் வெட்டுக்கள்	... 28
4. தமிழணங்கின் சீர் குன்றக் காரணமென்ன?	... 32
5. அறநெறி விளக்கம்	... 34
6. நமது கடமை	... 36
7. குங்குலியக்கலயநாயனார் சரித்திரம்	... 38
8. முதற்கண்டராதித்த சோழதேவர்	... 41
9. தாய்மொழியை வளர்த்தல்.	... 42
10. நம்மாழ்வாரது திருச்சீர்த்தொடை.	... 44
11. சிவப்பிரகாசன்	... 46
12. விசேஷக் குறிப்புகள்	... 48

பத்திராதிபர்
ம. சோ. பிச்சையதேசிகர்
திருவிடைமருதூர்.

"குண நிதி"

சந்தா விவரம்.

		ரூ. அ. பை.
வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	உள்நாட்டிற்கு	1—0—0
	வெளிநாடுகளுக்கு	1—4—0
	தனிச் சஞ்சிகை விலை	0—2—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழுவிலாசத்தையும் எழுதி யனுப்பல்வேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னர் அனுப்பியாவது வி. பி. யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

(3) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதிவரை பார்த்து அதற்குமேல் அதே தமிழ் மாத முடிவிற்குள் தெரிவித்தல்வேண்டும்.

(4) கடிதம் எழுதுங்கால் சந்தாதார் நம்பரைக் குறித்தல் நலம் பதில்விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் முத்திரையாவது அனுப்பினாலன்றி விடையளித்தல் இயலாது.

ஆயுள் சந்தா.	உள்நாடு	ரூபா.	15—0—0
	வெளிநாடு	,,	20—0—0
வருடம் ஒன்றுக்கு	அபிமானிகளுக்கு	ரூபா.	25 0—0
	போஷகர்களுக்கு	,,	50—0—0

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு	ரூபா.	6—0—0
அரைப் பக்கத்திற்கு	,,	,,	3—8—0
கால் பக்கத்திற்கு	,,	,,	2—0—0

முன் பணம் இன்றி விளம்பரஞ் செய்யப்படமாட்டாது.

"குண நிதிப்" பிரசுரசாலை, திருவிடைமருதூர்.

உ

ஸ்ரீ ஆண்டவிநாயகர் துணை.

குணநிதி.

"கற்க கசடறக் கற்க கற்றபின்
னிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

(All Rights Reserved.)

மலர் 1 } இரக்தாக்ஷி-௵ ஆடி-௴ க௳ / 1924-௵ ஜூலை-௴ 16௳ { இதழ் 2.

கடவுள் துதி.

திருச்சிற்றம்பலம்.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமருளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்துமுடியும் வண்ண முன்னின்றே.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நிர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

குண நிதி.

குணம்.

அரியமானிடப் பிறப்பையுற்ற நம்மவர்களுக் குரிய பல தன்மைகளில் முக்கியமானது "குணமே." அது இருவகைப் படினும், ஈண்டு யாம் கூறப்புகுவது நற்குணத்தைப் பற்றியே யாம்.

மானிடர் தம்மிடத்தேயுள்ள காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியங்களை நாளடைவிற் களைந்து வருவாராயின் உன்னதமான பதவியை அடைந்து சிறப்புறுவார்களென்பது திண்ணம். கல்வி, அறிவொழுக்கங்களாற் சிறந்து எவர் விளங்குகின்றனரோ, அவரிடத்தே குணம் குடிகொண்டிருக்கும். மேலும் துர்க்குண முடையாரிடத்தே குணமென்பதையே காணவியலாது. 'மனம் போன போக்கெல்லாம் போக வேண்டா'மென்று கூறியவாறு, மனதைப் பல துறைகளிற் செல்லவிடாது காத்தாலன்றித் தம்மைப் பற்றியுள்ள துர்க்குணம் நீங்காது. அன்னார் அதுவுள்ள வரையிலுங் குணமுடையார் என்று எவராலுங் கருதப் பெறார். எக்காலத்தும் முக்தியையும் எய்தார். விருப்பு வெறுப்பற்ற மேலோரிடத்து அன்பும் கடவுளிடத்து மனமிளகிய பக்தியும், எவ்வுயிரையும் படைத்து, காத்தருளும் எல்லாம் வல்ல இறைவன் போலக்குடிகளிடத்தன்பும் அருளுங்கொண்டு வாழுங் கொற்றவனிடத்தும், சன்மார்க்கநெறியிற்றிறம்பாது ஒழுகிவரும் குருமாரிடத்தும் பணிந்து பழகுறுந் தன்மையும், வறுமை, பிணி முதலியவற்றால் வருந்துந் தாழ்ந்தோரிடத்துத் தயையும், 'பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க நெறி நின்றார் நீடு வாழ் வார்' என்று ஆன்றோர் உரைத்தருளியவாறு, இந்திரியங்களைப் பலவிடயங்களிற் செல்லவிடாது, தன்வயப்படுத்தி யடக்கியாளும் ஆற்றலும், பிறரால் தனக் கேற்பட்ட உபகாரங்களைப் பலர் அறியும்படிச்

சொல்லி, தான் பிறருக் கியற்றிய உபகாரம் பெரிதாகினும், அதை வெளிப்படுத்தா திருத்தலும், 'நல்லார் பிறர்க்குற்றஞ் சொல்லார்' என்பது போல பிறர்குற்றங்களை யாராய்ந்து வெளியிடா திருத்தலும், 'பிறர் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கறனொன்றோ ஆன்ற வொழுக்கு.' என்ற வாக்கின்படி தான் கொண்ட இல்லறக்கிழத்தி யல்லது மற்றையோரைத் தாய், உடன் பிறப்பினராகப் பாவிப்பதும், தர்ம வழியிற் சம்பாதித்தலையும், அங்ஙனம் ஈட்டிய பொருளை இயன்றவரைத் தர்ம வழியிற் செலவிடுகலையுங், தன் முகற் கொள்கைகளாகக் கொண்டு நடத்தலும், 'போதுமென்ற மனமே பொன் செய்யு மருந்து' என்னும் அறவுரைக்கேற்ப, தான் பெற்றதையே கொண்டு உவந்திருத்தலும், கயவர்கட்குச் செல்வமல்லது பகை வேறு உண்டோ? என்னும் வாக்யத்தைத் தன்மீது எவரும் எடுத்துக் காட்டற்குக் காரணமின்றி வாழ்தலும், 'சாந்தனையுந் தீயனவே செய்திடினும் தாமவரை—ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்' என்றபடி, பிறாறியாமையால் தீங்கிழைப்பினும் அதைப்பொருட்படுத்தாது, அவர்களுக்கு நன்மை புரிவதிலேயே நாட்டமுடையவர்களாயிருத்தலும், தன்னுயிர் போல் மன்னுயிரைப் பாவிக்குந் தன்மை யுடையவர்களாதலும், தான் அறிந்த பல அரிய விடயங்களையும் எவரும் அறியும்படிக் கூறுவோராயிருத்தலுமாகிய இத்தகைய அரிய செய்கைகளை யுடையவர்களே குணமுடையாரென்று, அறிஞர்களால்கருதப்படுவாராவர். குணமும் அவரிடத்தே கண் கூடாய்க் குடிகொண்டிருக்கும். அவர்களும் கைம்மாறு கருதாது, 'புயல்' போல், பிறருக்கு உபகாரங்கள் பல செய்வார்கள்.

இவ்வரிய குணங்களைப்பெற வேண்டுவோர் 'நல்லாரிணக்கமும்' என்ற பட்டினத்தடிகள் வாக்கின்படி நேசித்து, அவர்களுடைய கொள்கையைப் பொன் போல் மதித்து அதன்படி நடத்தலே இன்றியமையாததாகும். அஃதொன்றே அன்னாரை எல்லா நற்குணங்களும் நிறைந்தவராகச் செய்யு மென்பது துணிபு.

ஆகையால், நல்லறிஞர்களாகிய பெரியோர் உலகோர் அறிந்துய்யும் வண்ணம் எழுதியுள்ள பல அருங்குணங்கல் நிறைந்த கட்டுரைகளைத்தன்னகத்துக் கொண்டுள்ளதாகித், திங்கள் தோறும் உலவும்"குணநிதி" யைத் தாமும், தமது கேண்மையோரும் உடையாராகி அதனுடன் பழகி, அருங்குணமும் பேரருளும் பெற்றுவாழ எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளது திருவடிகளைச் சிரமேற்கொண்டு சிந்திக்கின்றோம். சுபம்!

பத்திராதிபர்

காழிக்கல்வெட்டுக்கள்.

(5-ம் பக்கம் தொடர்ச்சி.)

கி. மு. ஆறும் நூற்றாண்டிற்கு முன்னரே நம் தேசத்தவர்கள் அடைந்திருந்த நாகரிக முன்னேற்றத்தைக் கொண்டும், சாசனங்களின் சேஷங்களால்வெளிப்படும் பரந்தநீதியமைந்த ராஜாங்க முறைமைகளைக் கொண்டும் ஆராயுமிடத்து வெகு காலம் முதலே உத்தியோகத்துக் கடுத்த பல சாதனங்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவாம். 18ம் நூற்றாண்டிற் பேஷ்வாக்களின் தினசரிகள் போன்று அச்சாதனங்கள் குறிப்பேட்டு ரூபமாயிருந்திருக்கலாம். அத்தன்மைக்குறிப்புகளிலும் சாதனங்களிலும் தேச சரித்திர அமைப்புக்கு வேண்டிய முக்கிய விஷயங்கள் ஆழ்ந்து கிடக்கின்றன.

இதனினும் முக்கிய விஷயங்கள் சில ராஜவம்சங்கள் அழிந்துபோயும், அவ்விராஜாக்களின் பூர்விக சாதனங்களிலும் கதைகளிலும்அடங்கியுள. கி.பி.550முதல்757வரைசெங்கோல் நடாத்தியபதாமியின்முற்சாளுக்கிய இராஜவம்சத்தின் சாதனங்கள் இவர்களுக்குப்பின்2நூற்றாண்டுகள் இடையில்வேறுவம்சத்தினர் ஆண்டிருந்தும், கலியாணத்து மேற்சாளுக்கிய அரசர்கள்(கி. பி. 973–1189) கையிலகப்பட்டதால், இவர்கள் முற்கூறிய தம்முன்னவர்களின் விருத்தாந்தங்களை யறிந்து அவர்கள்

வம்சத்தர்கள் தாம் தாங்களென்று பழமை பாராட்டி வந்தார்கள். அரசர்களும் இவர்களும் இறந்தபின்பு அவர்கள் வம்ச சரித்திரங்கள் அத்தியாயம் அத்தியாயமாக எழுதப்பட்டன. (பதிற்றுப்பத்து–பதிகம்) தினவர்த்தமானக் குறிப்புகளிலிருந்தும் இதர விடங்களிலிருந்தும் கோத்த அச்சரித்திர அத்தியாய ஆரம்பப்பிரதி கி. மு. 156–155 வருஷத்து ஹதிகும்பன் குகைச்சாஸனத்தோடு பொருந்தி கலிங்கதேசத்துக் காரவேன் ராஜாவின் பிறப்புமுதல் அவன் அரசாட்சியின் பதின்மூன்றும் வருடம் வரை கால வர்த்தமானத்தைப் பற்றித் தெளிவாகச் சொல்லுகிறது. இவ்வித ஆராய்ச்சிகளால் நூதனமும் விநோதமுமுள்ள அநேக உண்மைகள் வெளிப்படும் என்பதற்கையமின்று.

புராணங்களில் சில அத்தியாயங்களிற் கண்ட வம்சானுசரிதங்களையும், பழைய குறிப்புச்சாஸனங்களையும் கொண்டு கி. பி. 320 முதல் 500 வரையில் ஆண்ட குப்த வம்சத்தைப் பற்றி சில சமாசாரங்கள் சுருக்கமாய்க் குறிக்கப்பட்டுள. இவ்வத்தியாயங்களாற் பொதுக் காரியங்களையும் அறியலாம்.

கி. பி. 1148ல் கல்ஹணரது 'ராஜதரங்கிணி' ஒன்றே கி. மு. 2448 முதல் காஷ்மீர தேசத்தின் பொதுச் சரித்திரமாக நம் நாட்டவர் எழுதிய நூல். அக்கல்ஹணர் அந்நூலைச் சுப்பிரதன், க்ஷேமேந்திரன், ஹேலராஜன், பத்மமிஹிரன், முதலியவர்களைப் பின்பற்றி 12 ராஜகதைகளையும் நீலமுனிவரது நீலமுனி புராணத்தையும் கொண்டு சில சாஸனங்களையும் கரலிகிதங்களையும் சோதித்து எழுதினார். அவருடைய காலத்தையும் அவருக்குமுன் 2 நூற்றாண்டையும் பொருத்த அளவில் அவர் குறித்திருக்கும் விஷயம் தவறிலது. கி. மு. 264 வருஷத்து அசோக மௌரியன் கி. மு. 2448க்கும் 1182க்கும் இடைப்பட்ட ஓர் காலத்தினர் என்பதும், முதல் ரணாதித்தியர் மூன்று நூற்றாண்டுகள் அரசாண்டாரென்பதும் தவிர மற்றைக்கருத்துக்களால் அந்நூல் காஷ்மீர தேசத்து ஸம்பவங்களின் கால நிரூபணத்திற்கும் சேஷண மனித சாஸ்திரத்திற்கும் அத்யாவசிய

மானது. அஃது யாப்பமைந்த 8000 சம்ஸ்கிருத ச்லோகங்களடங்கியது.

கலைஞான நூற்களுக்கிடையும் தேச சரித்திர விஷயங்களைக்காணலாம். பேர்பெற்ற வீரனைப் பற்றியோ ஊரைப் பற்றியோ எழுதப்பட்ட சில நாடக கதா பாகங்களும் பெருங் காப்பியங்களும் கற்பி கவிகிர்த கதைகளும் பூசாஸ்திர ஆராய்ச்சியில் அல்லாது மற்றெவ்விதத்திலும் பயன்படா, இடற்களைக் குறிக்கவும் அரசர்களின் தேசஎல்லைகளைத் தீர்மானிக்கவுமாத்திரம் உதவுதலின். அவற்றில் சொல்லிய சம்பவங்கள் ஒன்றுக்கேனும் அவை காலம் கூறில. சம்ஸ்கிருத கத்தியகாவியங்களில் பாணகவியினுடைய ஹர்ஷ சரித்திரமும், பத்தியகாவியங்களில் பில்ஹணரின் விக்கிரமாங்கதேவ சரித்திரமும் ஆகிய இவற்றுள் முன்னது கி. பி. 605 முதல் 648 வரை தானேசுவரம் கன்னோசி யென்ற ராஜ்யங்களையாண்ட வடதேசத்துப் பேரரசன் ஹர்ஷனைப்பற்றியும், பின்னது கி. பி. 1076 முதல் 1126 வரையாண்ட கல்யாண நாட்டின் மேற்சளுக்கிய ஆறுவது விக்கிரமாதித்தியனைப் பற்றியும் பண்ணமைக்கவையேனும் கால விவரங்கூறாது கதையின் போக்காக இயற்றியவை. இத்தகைய நூல்களில் களவழி, கலிங்கத்துப்பரணி, விக்கிரம சோழனுலா அடங்கும். இவை கற்றற்கு மனோகரமானவை; மிகுந்த பிரயோஜனமுள்ளவை; ஜனங்களின் நடை யுடை பாவனை கைத்தொழில் வியாபாரம் வியாபாரமார்க்கந் தேச அமைப்பு கிரஹசமுதாய மதசம்பந்த விஷயங்களெல்லாவற்றையும் தெரிவித்தலின் ஒப்புயர் வற்றனவாய்ச் சாஸனங்களால் நாம் அறியும் விஷயங்களுக்கு வேண்டியவற்றை யுபகரிக்கின்றன.

பெரு நூல்களின் முகவுரையிலும் முடிவுரையிலும் அந்நூல் கூறும் சில சம்பவங்களினிடையிலும் (அரிச்சந்திரபுராணம் பிரபுலிங்கலீலை, பதிற்றுப்பத்து) காலம் கூறப்பட்டுள. சோமதேவசூரியின் யசஸ்திலகா என்ற நூல் முடிவில் இது இயற்றப்பட்டது, சகம் 881 (கி.பி. 959) என்றும் கிருஷ்ணராஜனுடைய இரண்டாம் பிளிகைக்காரனைப்பெயர் கூறாது அவன்வான்முறை

யின்னது என்றும் சுட்டாமல் சொல்லுகிறது. இவ்விஷயம் கலாசாஸன சம்பந்த காரணங்களைக்கொண்டு ருசுப்பட்டும் சேர்க்கப்பட்டும் ஊர்ஜிதப்பட்டுமிருக்கிறது.

புராணம் இதிகாசம் ராஜதரங்கிணி ஒரிஸ்ஸா நேபாளமுதலிய தேசவம்சாவளி தேச சரித்திரக்கதை யிவற்றைக்கொண்டு நாம் தேசசரித்திரத்தை அமைப்பின் அஃதும் பூரணமாதல் எங்ஙனம்? இவையாவும் அசோகரைக் கூறினாலும் அவர்காலத்தைக் காஷ்மீர் நேபாள தேச ராஜ சரித்திரங்கள் ஒரே காலமாகவும் ராஜதரங்கிணி கி. மு. 1260ம வருஷமாகவும் நேபாள வம்சாவளி கி.மு. 2600ம் வருஷமாகவும வரையறுத்துச்சொல்லுகின்றன. கி. மு. 1260ம வருஷத்தை முக்கிய நடுவருடமாக அங்கீகரித்து ஒருகால கணித அட்டவணை தயாரித்தால் சந்திரகுப்தருக்கு கி. மு. 1260 முன் ஏதோ ஒரு காலத்தைக் கொடுக்கவேண்டி வரும். கிரேக்க நூலாசிரியர்களின் எழுத்துக்களால் அவர் காலம் கி. மு. 320 என்பது நன்கு விளங்கும். இவ் வண்ணம் அசோகன் கி. மு 265க்கு முன் இருந்திருத்தல் முடியாதென்று அறிந்துகொள்ளலாம். முன் செய்த தீர்மானங்கள் 1000 வருஷங்களினால் வித்தியாசப்படக் காண்கிறோம். ஆதலால் இவ்விஷயங்கள் வேறு சாதகங்களைக் கொண்டே ஆராய்ந்து அறியச் சாத்தியமான சம்பவ காலமாகிற ஒருவழியற்ற காடுபோலிருக்கின்றன. அதிர்ஷ்ட வசத்தால் சந்திரகுப்தரைப் பற்றிய விஷயங்கள் வெளிப்பட்டு அசோகரின் சாஸனங்களின் உள்ளுறை தெரிந்து, பின்னர்ச் சாஸனங்கள்மேல் செலுத்திய கவன விசேஷத்தால் பெரிய சரித்திரக் கட்டடம் கட்டும்படி நல்ல அஸ்திவாரக்கற்கள் போட்டிருக்கின்றன.

(தொடரும்)

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை.

தமிழணங்கின் சீர் குன்றக் காரணமென்ன?

(10-வது பக்கத்தொடர்ச்சி)

மாணவர்கள் பயிலும் சம்ஸ்கிருதம் எவ்வளவு வரை பிரயோசனமென்பதைக் காட்டினோம். இது பொழுது அவர்கள் தமிழைப் புறக்கணித்தலால் உண்டாகும் கேட்டைக் கூறுவாம். பிள்ளைகள் முதலாவது பாரமுதல் தமிழைவிட்டு, சம்ஸ்கிருதத்தைக் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறார்களல்லவா? அன்றுதொட்டே தமிழைச் சுத்தமாக விட்டுவிட ஆரம்பிக்கின்றனர். ஒருவனுக்குத் தமிழில் [சுயபாஷையில்] கல்வி கற்பிக்க வேண்டுமென்றிருக்கும்போது அவன் எங்ஙனம் தமிழைமறக்கமுடியும் புறக்கணிக்க முடியுமென்ற கேள்விகள் பிறக்கின்றன வென்பதுண்மையே. அவன் சரித்திரம் பூகோளம், ஆகாதாரம் முதலானவைகளைச் சுயபாஷையில் பயிலவில்லையா என்கின்றனர். ஆம்! உண்மைதான்!! அந்நூல்கள் எழுதப்பட்டிருக்கும் மாதிரிகளைப் பின்னர் பேசுவோம! இவைகளைத் தேசபாஷையில் பயின்றாலும் அவன் படித்துச் சாரத்தை அதன் பொருளை அறிந்து கொள்கிறானே யொழிய அதன் இலக்கணம், பாகுபாடு இவைகளை அறிவதுமில்லை. அறியநேரமுமில்லை. படிக்கும் மாணவன் தான் படிக்கும் புத்தகபாடத்திலுள்ள பொருளை அறிவானே யன்றி 'அந்த' என்றெழுதுவதுமன்றி அதுவும் அதே மாதிரி ஓசையைக்கொடுக்கவில்லையா வென்றும், ஆகையால் எந்த எழுத்தை எழுதினால் என்னவென்றும் வாதாடுவான். சொல்லுக்குரிய பொருளையும் தெரிந்து மிரான்; தெரிந்து கொள்ளவுமாட்டான். தமிழிலே ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பொருளைக் கொடுப்பதென்ற உண்மையைத் தெரிந்து கொள்வதில்லை. இவைகளெல்லாம் உண்டாவதற்குக் காரணமாயிருப்பது இவன் தமிழ், அதாவது வாசகம், செய்யுள், இலக்கணம்

மூன்றும் சேர்ந்த ஒருபாடத்தை வகுப்புக்கு உரிய பாடமாக நினைத்துப் படிக்காத காரணமே தவிர வேறொன்றுமில்லை. அவ்வாறு பாடம் ஏற்படுமாயின் அவன் சொற்கள் பல; ரகர றகர பேதங்கள் பலதிறப்பட்டன; இவைகளினால் பொருள்கள் ஒன்றுக்கொன்று நேர்விரோதமானவைகளைக் கொடுக்கும்என்பதை அறிந்து கொள்வான். அன்றியும் ணகர னகர நகரங்கள் உபயோகிக்க வேண்டிய இடங்கள் இவையென்றும், இன்னின்ன பொருளில் இன்னின்ன எழுத்துக்கள் உபயோகப் படுகின்றன என்றும் அறிவான். முதலாவதாயுள்ளஎழுவாய் பயநிலைகளோடு வாக்கியங்கள் முடியவேண்டு மென்பதைக் கூட மறக்கிறான். இவைகளெல்லாம் ஏற்படக் காரணம் இவனுக்குத் தமிழ் ஒரு பாடமாகஏற்படாததே.

ஆயினும் இதனால் மாணவர்கள் தமிழ்தான் கற்கவேண்டும் சம்ஸ்கிருதம் கற்கவேண்டுவதில்லை என்று சொல்ல வரவில்லை. மாணவர்களுக்குக் கல்விமுழுவதும் வர்ணகுலர் என்னும் சுயபாஷையில் போதிக்கவேண்டுமென்று சொல்லிவிட்டுச் சுயபாஷைக்கு ஒரு காலமர்வது தினமானம் கட்டாயமாக ஏற்படுத்தாததைப்பற்றித்தான் இப்பொழுதுகுறைகூற வந்தது. சம்ஸ்கிருதம் பயில்வோர் மாத்திரம் 'தனிப்பட்ட ஒரு காலத்தை எடுத்துக் கொள்ளட்டுமே? ஏன் சுயபாஷையைப் புறக்கணித்து அந்நியபாஷையைப் பயிலவேண்டும்.? நான் ஈண்டு அந்நியபாஷை யென்றது லத்தீன், ஸம்ஸ்கிருதம், கிரீக், முதலியவைகளைப் போன்ற பாஷைகளை நினைத்தேயாம். இது போலவே இச்சம்ஸ்கிருதம் படிப்போரும் தனிக்காலவரையறை பெறட்டும். ஆனால் தாய்ப்பாஷையான, சுயபாஷையான, அமிர்தம் போன்ற தமிழை ஏன் பயிலாமல் புறக்கணிக்கவேண்டும்? இதனை தினசரி எல்லாப் பிள்ளைகளும் கற்கும்பாடமாக ஏற்படுத்தினால் அப்பொழுது இந்தச் சமயமும் இதுவரையும் காணும் பிழைகளையெல்லாம் காணமாட்டோம். ஆகையால் பள்ளிப்பிள்ளைகளுக்குத் தமிழைத் தினமானம் நடக்கும் ஒரு கட்டாயப்பாடமாக ஏற்படுத்தி அதில் பிராமணன், சூத்திரன், பஞ்சமன் என்ற பாகுபாடு இல்லாமற் செய்யவேண்டும்.

இனி இம்மாணவர்களை விட்டுப் பெரியயோர்களை எடுத்து கொள்வோமானுல் முதலாவதாகப் பொது ஸ்தாபனங்களையும், நியாயஸ்தலங்களையும் கூறலாம். நியாய ஸ்தலங்களில் வழக்குகளும் [பிராது] மற்றுமுள்ள பிரமாணப் பத்திரங்கள், வாக்குமூலங்கள் முதலானவைகளும் தமிழிலேயே நடந்து வருகின்றன. இவற்றினை எழுதுவோர் முற்றுங் கற்றறிந்த பண்டிதர்களல்ல. ஏதோ ஒன்றிரண்டு கற்றுவிட்டு வெகு நாள் கைபடிய எழுதித் தேறிவந்த வக்கில் குமாஸ்தாக்களின் உதவிகளே. இவர்களைப் பற்றி நான் ஏளனமாகச் சொல்ல வேண்டுமென்று விரும்பி இவ்வாறு சொல்வதாக அவர்கள் எடுத்துக்கொள்ளாமலிருக்கும்படி பன்முறையும் வேண்டிக்கொள்கிறேன். தமிழ்க் கல்விகுறைவதன் சம்பந்தமாக எதெது சொல்லவேண்டியிருக்கிறதோ அதையெல்லாம் மறைக்காமல் சொல்லியே தீரவேண்டியது அவசியம் அப்படிச் சொல்லாவிடில் இந்தத் தமிழ் மாதாவுக்கு நாம் ஒரு பெருந்தீங்கு இழைத்தவர்களாவோம்.

(தொடரும்)

இலக்கண விளக்க பரம்பரை
திருவாரூர். சோமசுந்திரதேசிகர்

அற நெறி விளக்கம்.

(13-வதுபக்கத் தொடர்ச்சி)

இவ்வறத்தைவிட நமக்குயர்ந்த செல்வமும், இவ்வறத்தைச் செய்யாது மறத்தலைவிட நமக்குக் கெடுதியும் வேறு கிடையாது. இது பற்றியே நமது நாயனாரும்,

அறத்தினூங்காக்கமுமில்லையதனை
மறத்தலினூங்கில்லைகேடு—குறள்

எனக்கூறியதூம்ஔவையார் இளமகாருமுணர்ந்துய்ய ஆத்திச்சூடியில்

அறஞ்செயவிரும்பு எனக்கூறியதூம், கைலையங்கிரியிற் கல்லாலடியிற் றென்முகமாக எழுந்தருளியிருந்து நாமெல்லா முய்

யச் சகல வேதாகம சாத்திரங்களைத் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீதக்ஷிணாமூர்த்திபகவான், நாலுவேதங்களையுமோதியுணர்ந்த பிரமபுத்திரர்களாகிய சனகாதிமுனிவர்கள் நால்வரும், வேதத்துட்பொருளுணராது மதிமயங்கி முத்தியடையு மார்க்கம் யாதெனத் தம்மைக் கேட்டதற்கு மிக இரங்கி 'போர்த்த நீள் செவியாளரந்தணர்க்குப் பொழில்கொளானிழற்கீழறம் புரிந்து' எனத்தமிழ் வேதத்திற் கூறியவாறு, அறத்தினையே முத்திநெறியாகக் கூறியதூஉம் காண்க. இவ்வறமும் நாளைச்செய்வோமென்றெண்ணாது நினைத்தவுடனே செயற்பாலது. அவ்வாறு செய்தால் நமக்கிடர் வருங்காலத்துக் கெடாதுயிர்த்துணையாயிருந்து இரக்ஷிக்கும். நமக்குக்கிடைத்தஇம்மானிடப்பிறவியோ 'அலைகளைவீசுமாழ் கடலின் மிதக்கு நுகத்தடியின்றுளையில் ஒரு ஆமை கழுத்துப்புகுந்தது'போல் பலபிறப்புக்களிற்செய்தபுண்ணியமிகுதியால் வெகு அருமையாகக் கிடைத்த பெறுதற்கரிய பிறப்பு. இப்பிறப்பினழிவோ நீரிலெழுத்துப் போலின்ன காலமென்றறியாதநிலையினையுடைத்து. நாளைக்குச்செய்வோமென்று நினைக்கவோ

'இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்றெண்ணவோ
இடமில்லையே—எனத் தாயுமானார் கூறியவாறுநேற்றிருந்தானின்றிறந்தானென்னு மொழியையே யுடைய இவ்வுலகத்தில் இடமில்லை. ஆதலின் முத்திநெறியாகிய இவ்வறத்தைசெய்தலைவிட்டு வேறொன்றை மனத்தினுனினைத்தற்கு நேரமுண்டோ? இக்கருத்துப்பற்றியே சுந்தரமூர்த்தி நாயனார்.

" வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக் கடல் பசிநோய்செய்தபறிதான்
தாழாதறஞ் செய்மின்,

எனக்கூறியதூஉம், திருவள்ளுவர்

"அன்றறிவா மென்னாதறஞ் செய்யக மற்றது
பொன்றுங்காற்பொன்றுத்துணை,——எனவும்
நெருநெல் லுளனொருவனின் றில்லையென்னும
பெருமையுடைத்திவ்வுலகு,

எனவும்கூறியதூஉம்—

கபிலர்

'பெருக்காறொத்தது செல்வம் பெருக்காற்று
இடிகரையொத்தது இளமையிடிகரை
வாழ்மரம் ஒந்தது வாழ்நாளாதலின்
ஒன்றே செய்யவும் வேண்டுமொன்றும்
*நன்றேசெய்யவும் வேண்டும் நன்றும்
இன்றே செய்யவும் வேண்டுமின்றும்
இன்னேசெய்யவும் வேண்டும் இன்னும்.
நாளைநாளை யென்பீராகில்
நம்முடை முறைநா ளாவது மறியீர்
நமனுடை முறைநாளாவதும் அறியீர்'
எனக்கூறியருளியதூஉம்

குறுந்திரட்டில் வெண்பா.

'பெறுதற்கரிய பிறப்பிதிதன்போக்
கறிதற்கரிய †அவதி—பிறிதொன்றை
நாடுதற்கு நேரமுண்டோ நல்நெஞ்சேமுத்திநெறி
கூடுதற்கல்லாது குறித்து'

எனக்கூறியதூம் உணர்க.

(தொடரும்)

தரு. ஞா. சண்முகத்தம்பிரான்.
வேலூர்.

நமது கடமை.

(15-வது பக்கத்தொடர்ச்சி.)

மனிதஜன்மமெடுத்தவனுக்குப் பிறவிப்பிணியை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டியதுதான் கடமை. ஆனால் அப்படிப்பட்ட கடமையை தனக்கு ஏற்பட்ட 100 வயதுக்கு எப்பொழுது செய்தாலும் பயன்பெறலாமாகை

* நன்றென்பது = அறமேயாம். † அவதி = எல்லை.

யால் பிறகு செய்து கொள்ளலாமென்று வீணாகக்காலத்தைக் கழிக்காமல் உடனே செய்யவேண்டியது அத்யாவசியம். மனிதனது வாழ்நாளில் நித்திரை, இளமை, முதலிய யாவும் போக தனக்குக்கிடைப்பது மிகச்சொற்பகாலமாக இருக்கிறது. அதிலும் இன்பதுன்பங்கள் கலந்திருக்கின்றன. நமது சரீரமோ அழிந்துபோவது நிச்சயமாக இருக்கிறது. அழியுங் காலமோ நாமறிந்துகொள்ள முடியாது. நாளைக்கு நாம் இவ்வுலகில் ஜீவித்திருப்போமோ அல்லது நமனிடத்தில் சிக்கிக் கொள்ளுவோமோ அதுவும் தெரியாது. இதனையே கபில மகரிஷி

"மனிதர்க்கு வயது நூறல்லதில்லை
ஐம்பதிரவிலகலுந் துயிலினால்
ஓட்டிய விளமையி லோரைந்து நீங்கு
மாக்கையிளமையிலைம்மூன்று நீங்கும்
எழுபதுபோக நீக்கிருப்பன முப்பதே
அவற்றுள்
இன்புறு நாளுஞ் சிலவே அதா அன்று
துன்புறு நாளுஞ் சிலவே யாதலால்
பெருக்காறொத்தது செல்வம்; பெருக்காற்
றிடிகரையொத்தது இளமை; இடிகரை
வாழ்மரமொத்தது வாழ்நாள்; ஆதலால்
ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
இன்றே செய்யவும வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும் இன்னும்
நாளைநாளையென்பீராகில்
நம்முடை முறைநா ளாவது மறியீர்
நமனுடை முறைநா ளாவது மறியீர்"

என்று வெள்ளிடைமலைபோல் விளக்கியிருக்கின்றனர்.

"இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பரென்றெண்
ணவோ திடமில்லையே"

என்று ஸ்ரீமத் தாயுமானவரும்,

"நெருநலுள னொருவனின்றில்லை என்னும்
பெருமையுடைத்திவ்வுலகு"

என்று திருவள்ளுவ நாயனாரும், தத்தமது ஸ்வானுபூதியை உள்ளபடி வெளியிட்டிருக்கிறார்கள். இன்னும் நமது உடலின் நிலையாமை, செல்வநிலையாமை, இளமைநிலையாமை முதலிய வற்றை

"நீரிற்குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று"

என்றார் [ஸ்ரீகுமாரகுருபரசுவாமிகள்]

"இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல்என்னாது
பின்றையே நின்றது கூற்றமென்—றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டா ரறம்"

என்றார் [நாலடியார்.]

(தொடரும்)

E. K. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

குங்குலியக்கலய நாயனார் சரித்திரம்.

(18-வது பக்கத்தொடர்ச்சி.)

உணவுப் பொருள் வாங்கச்சென்றவரை வீட்டிலுள்ளோர இரவு முழுவதும் ஆவலுடன் எதிர்பார்த்துப் பிறகு களைப்பு மேலிட அயர்ந்து தூங்கினார். தம் பக்தனைச் சோதித்தது போதுமென்று கருணை கூர்ந்த சுவாமி, ஒன்றுமில்லாத தம்

பக்தர்வீட்டில், அளவற்ற பொன், வெள்ளிக்குவியல் மற்றும் வேண்டியசாமான்கள் முதலியவைகளை நிரப்பினார். ஸ்திரீரத்ன மாகிய கலயரின் மனைவியாரின் சொப்பனத்தில் தோன்றி பெண்ணே! கலயன் பசியால களைப்புற்றிருக்கின்றான். விரை வில் போஜனப்பொருளைபதபசெய் என்றனர். உடனே அவர் கண்விழித்துப் பார்த்துத் திடுக்கிட்டார். இஃதென்னவிந்தை! எங்குப்பார்க்கினும் நாணயக்குவியல்களும் உணவுப் பொருள் களும் நிறைந்து கிடைக்கின்றன! இவைஎப்படி இங்குவந்தன இதுவும் ஈசன் திருவிளையாடல்களிலொன்றோ! உணவுப்பொ ருள் வாங்கச்சென்ற நாதனைக்காணோமே. அவர் எங்குக்களைத் துத்துயில்கின்றாரோ! என்று ஆவலுடன் எதிர்பார்த்து நின் றார். கோவிலில் மெய்மறந்து சிவதரிசனத்தில் மூழ்கியிருக் கும் கலயர்முன் சிவபெருமான் தோன்றி "பக்த சிரேஷ்டா, நீ வீட்டிற்குச் சென்று உன் களைப்பைத் தீர்த்துக்கொள்ளுதி" என்றருளினர். அப்பொழுது தான் கலயருக்குத் தம் வீட்டு ஞாபகம் வந்தது. மனைவிமக்கள்யாது செய்கின்றனரோ எனக் கவலையுறினும் இறைவன் கட்டளைக் கஞ்சி, வீட்டிற்குச் சென் றார். வீட்டில் நடந்திருக்கும் விசேடங்களைக்கண்டு திகைத்து அவரை வினவ, அவ்வுத்தமி, "ஐய! தேவரீது மனத்துணை நாயகனாகிய மதியணிந்த வள்ளல்செயலே அடியாளோ அறிவேன் எனக்கூறி அருண்மிகுந்த நம் மையனளித்தவற்றைஉண்டுகளை யாற்றுங்களென வேண்டினர். அவ்வாறே இல்லத்து வாழ்வார் யாவருமுண்டு இறைவன் பெருங்கருணையை நினைந்து நினை ந்து அன்புமேலிட, பல்வேறுகைங்கர்யங்கள் செய்துசிவஞான மேலிட்டு வாழ்ந்து வந்தனர். இப்படியிருக்குங்கால் ஆடு துறைக்கருகிலுள்ளதும், அநேக இதி ஹாஸபுராணங்களினாலே துதிக்கப்பெற்றதும், 'தாலவனம்' என்ற பெயருடைய திவ்ய க்ஷேத்திரமுமாகிய திருப்பனந்தாளில் ஓர் அதிசயம் நடை பெற்றது.

ஆண்டுத்திருக்கோயில் கொண்டுள்ள சிவலிங்கப்பெரு மான் தம்மையருச்சித்த ஆதிசைவப் பிராமணஸ்திரீயின் மான

ரக்ஷணையின் பொருட்டுச் சாய்ந்தவடிவைப் பிற்காலத்துள்ள சோழவரசன் நிமிர்த்திதரிசனம் செய்யவிரும்பிச் சிவலிங்கத்தைக் கயிறுகளாற்கட்டி யானைகளைக்கொண்டு இழுப்பித்து வலிய முயற்சி செய்தான். அன்பின் பொருட்டுக் குனிந்த பெருமானை அன்பின்கயிற்றாலல்லவோ நிமிர்த்தல்வேண்டும் என வெண்ணி சிவலிங்கத்தின் திருமேனியில் கட்டப்பட்ட கயிற்றின் மறுமுனையைத்தம் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு, இறைவன் திருமேனியில் அபசாரமுண்டாகும்படியான இவ்வரசன் செய்கைகளைப்பார்ந்துயிர்வாழேன். எம்பெருமான் நிமிர்தால் நிமிரட்டும் இன்றேல்என் னுயிர்போகட்டுமெனச்சொல்லி சிவநாமத்தை ஜபித்துக்கொண்டு வலிந்து இழுத்தார்.

பக்திவலையிற் படுவோனாகிய சிவபெருமான் "நெட்டிருப்புப் பாரைக்கு நெக்குவிடாப்பாறை, பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்" என்றபடி அவரது அன்பிற்கு அகங்குழைந்து உடனே நிமிர்ந்தனர்.

இதனைக் கண்ட அரசனும் மற்றையோரும் பெருவியப்படைந்து சந்தோஷ ஆரவாரம் செய்து அடியார், பெருமான் திருவடிகளில் விழுந்து வணங்கிப் புகழ்ந்தனர். கலயரும் இறைவனது பெருங்கருணையை நினைந்து நினைந்துஅவரடி மறவாத அன்புடையவராய், குரு லிங்க சங்கமங்களிடத்துக் குறையாது வளர்கின்ற அன்பாற் பெருத்த திருமேனியுடன் இப்புவியில் வாழ்ந்து என்றுமழியாப் பேரின்பநிலையத்தை எய்தினர்.

இவ்வாறு அடியார் வேண்ட வேண்டியவற்றைத்தரும் கருணாகரக் கண்ணுதற்பெருமான் என அறிந்து அவ்விறைவன். இயல்பையும், அவரியல்பை வெளியிட்டுக் காட்டும் அடியார்களியல்பையும் மறவாது என்றும் வாழ்த்தி அவர்களையும் வணங்கி நல்லறிவு பெருவோமாக.

V. சந்தானமய்யங்கார், B A , L.T

முதற்கண்டராதித்த சோழதேவர்.

(20-வது பக்கத் தொடர்ச்சி.)

இனி, கண்டராதித்தரது ஆட்சிக் காலம் மிகச்சுருங்கிய தொன்றேயாம். இவர், தம்கீழ்வாழுங்குடிகளிடத்தில் அன்பும் இரக்கமுமுடையவராய்ப் பல நற்கருமங்களைச் செய்துள்ளனர். இவர்காலத்திற் போர் முதலியன நிகழவில்லையாதலின், குடிகள் எல்லோரும் இன்புற்று வாழ்ந்துவந்தனர். ஆதலால் அன்னோர் தம் அரசர்பாற் பேரன்புடையராய், அவரைக் கடவுளின் அவதாரமென்றே கருதுவாராயினர். இவருக்கு வீரநாரணியார், செம்பியன்மாதேவியார் என்ற இரு மனைவியர் இருந்துள்ளன ரென்று தெரிகிறது. அவ்விருவருள் முன்னவர் இவரது வாழ்க்கையின் முற்பகுதியிலிருந்தவர். அவ்வரசியார் பலகோயில்கள் கட்டுவித்துப் புகழுற்றனரென்று கி. பி. 931ல் வெட்டப் பெற்ற முதற்பராந்தகசோழதேவரது கல்வெட்டுக் கூறுகின்றது. இவரது வாழ்க்கையிற் பிற்பகுதியிற், பட்டத்தரசியாக விளங்கியவர் *செம்பியன்மாதேவியார் எனப்படுவர். அரசரது இரண்டாம் மனைவியாகிய அவ்வம்மையார் மழநாட்டரசரது புதல்வியென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. நமது கண்டராதித்தருக்கும் செம்பியன்மாதேவியாருக்கும் மதுராந்தகன் என்ற ஒரு புதல்வர் பிறந்தனர். அவரை உத்தமசோழரென்று அழைப்பது வழக்கம். புதல்வர் பிறந்தவுடன் அரசர் வானுலகஞ்சென்றாரென்று லேய்டன் செப்பேடுகள் கூறுகின்றமையின் இவர் செம்பியன்மாதேவியாருடன் நெடுங்காலம் வாழ்ந்திருக்கவில்லையென்று தெரிகிறது. ஆனால் அவ்வரசியார் மாத்திரம் தம்நாயகர் இறந்தபின்னர் நீண்டகாலம்உயிருடனிருந்துள்ளனர். முதல் இராஜராஜ சோழதேவரது ஆட்சியின் 16-ம் ஆண்டாகிய கி. பி. 1001 வரை அவர் இருந்தனரென்பது

* செம்பியன்மாதேவியாருக்கு உடையபிராட்டியார் என்ற பெயரும் உண்டு.

கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. எனவே தன் நாயகர் இறந்தபின்னர் சற்றேறக்குறைய நாற்பத்தைந்து வருடங்கள் அவர் உயிருடனிருந்திருக்கின்றனர். அவர், அரசாது முதன் மனைவியாரைப்போல் தாமும் பலகோயில்கள் எடுப்பித்து அவற்றிற்கு நிலங்கள் அளித்தனரென்று பலகல்வெட்டுக்கள் புகழ்ந்துரைக்கின்றன.

நம் கண்டராதித்தர் கி. பி. 955-ல் இறந்தபோது இவரது புதல்வர் மதுராந்தகசோழர் என்பார் முடிசூடிக் கொண்டு அரசுபுரிவதற்கு ஏற்ற பருவத்தினராயில்லை. ஆதலால் இவரது தம்பியாகிய அரிஞ்சயனென்பவர் இவருக்குப்பின்னர் ஆட்சி புரியத்தொடங்கினர். அரிஞ்சயனும் அவரது புதல்வர் சுந்தர சோழரும் அரசாண்டபின்னர், மதுராந்தகசோழர் கி.பி 969ல் முடிசூடிக்கொண்டு 16-வருடகாலம் ஆட்சிபுரிந்து கி. பி. 985ல் விண்ணுலகெய்தினர் என்ப.

மதுராந்தகசோழர் அவரது தாய்தந்தையராகிய செம்பியன்மாதேவியார், முதற்கண்டராதித்தர் என்ற மூவரது படிமங்களும் தஞ்சைஜில்லாவிலுள்ள கோனேரிராஜபுரம் சிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

தி. வை. சதாசிவ பண்டாரத்தார்.

உ

தாய்மொழியை வளர்த்தல்.

இத்தலைத்தொடர், 'மொழி என்பது யாது? தாய்மொழி என்பதன் பொருள் என்னை? நமது தாய்மொழி யாது? அதன் தொன்மையும் மேன்மையும் எத்தகையன? வளர்த்தல் என்பது யாது? ஏன் வளர்த்தல்வேண்டும்? வளர்க்காவிடில் வரும் இழுக்கென்னை? வளர்த்தலால்வரும் பயன்யாது?' என்ற பல பகுதிகளாக்கிக் கூறுவதால் ஒருவகையாக விரித்துரைக்கப்படலாம். ஆதலின், அம்முறையிற் சிறிது கூறுவேன்.

மொழி.

இது, மக்களாவார்ஒருவர்கருத்தைப்பிறிதொருவருக்குத் தெரிவிக்கத் துணைபுரிவது; அவர்களை விலங்கினத்தினின்றும் வேறுபடுத்தி உயர்த்துவது; சான்றோர் பலரும் அவ்வப்பொழுது ஆராய்ந்து அறிந்த பெறலரும் உண்மைக்கருத்துக்களைத் தாம் உணர்வது மாத்திரம் அன்றித் " தா மின்புறுவ துலகின் புறக்கண்டு—காமுறுவர் கற்றறிந்தார் " என்றபடி பிறர்க்கும் அறிவித்து அவரையும் பயன்படச்செய்யும் பெருமையினை ஒவ்வொருக்கும் தரவல்லது; செவிப்புலனும் அணுவாகிய ஒலி நுட்பங்களால் உண்டாவது; உலகினரால் மொழியப்படிவது.

தாய்மொழி

உலகம் பலவேறுநாடுகளாக அமைந்திருக்கின்றதுஎன்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் உள்ளக் கருத்துக்களை ஒருவரோடொருவர் அளவளாவிக் கலந்து கொள்ளவேண்டியதும் இன்றியமையாததொன்றும். ஆதலின், அம்முறையில் ஒவ்வொருநாட்டினரும் தாம் தாம் நினைத்தவற்றையும், கண்டவற்றையும், அறிந்தவற்றையும், தத்தம் இயற்கைக்கும், அறிவுக்கும், நாகரீகத்திற்கும் ஏற்றவாறு ஒருவரோடொருவர் அளவளாவத்தக்கவகையில் தனித் தனி மொழிகளைப் படைத்துக்கொள்வாரயினர். அங்ஙனம் ஒவ்வொரு நாட்டினரும்படைத்துக்கொண்டமொழியே அந்தஅந்த நாட்டினர்க்குத்தாய்மொழியாவது, இதனை நாட்டுமொழி நிலத்து மொழி என்றும்: தேசபாஷை என்றும் கூறுப. இதனை, "நாம் குழவிப்பருவந் தொட்டுப் பயின்றுவந்தது; இன்பிலும் துன்பிலும், யாண்டும், என்றும் நம்மோடு பயில்வது " எனக்கூறிச் சிறப்பிப்பர் அறிஞர். " தாய்மார்கள் இயல்பாகப் பேசும் மொழிகளே தாய்மொழிகளாம் " என்ற கருத்துப்பட ஓர் இடத்தில் வரைந்தருளினார் மகாத்மா காந்தி அடிகளும்.

நமது தாய் மொழி.

நாம் என்ற சொல்லுக்குப் பொதுவாக 'உலகத்துத் தோன்றிய மக்களாகிய நாம்' என்ற பொருள் கூறப்படலாம்.

எனினும், இங்கு, யான் இதற்கு கொண்டபொருள் 'தண்டமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்களாகிய நாம்' என்பதேயாம். கடவுளருளால் நமக்குத் தாய் மொழியாக அமைந்துள்ளது, "அனைத்துலகும் இன்பமுற எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெரும் தமிழ் அணங்கு" எனச் சிறப்பிக்கப்பெற்ற செந்தமிழ் மொழியாம் என்பதும் போதரும்.

(தொடரும்)

ஊ. சா. வேங்கடராமையர்.

நம்மாழ்வாரது திருச்சீர்த்தொடை.

கடவுள் வாழ்த்து.

"வைய மகளை யடிப்படுத்தாய் வையகத்தா
ருய்ய வுருவம் வெளிப்படுத்தாய்—வெய்ய
வடுந்திற லாழி யரவணையா யென்றும்
நெடுந்தகை நின்னையே யாம்."

(புறப்பொருள் வெண்பாமாலை பாடாண்படலம் பாட்டு ரு.)

ஸ்ரீ ராமபிரான் சரபங்கமுனிவரது ஆச்சிரமஞ் சென்று அவரிடத்து ஓரிரா நீங்குமளவும் தருமோபதேசங்களைக்கேட்டருளினனென்றவிடத்துக் கம்பர்:—

"அவ்வயி னழகனும் வைகின னறிஞன்
செவ்விய வறவுரை செவிவயி னுதவ
நவ்வியின் விழியவ ளொடுநனி யிருளைக்
கவ்விய நிசியொரு கடையுறு மளவின்."

என்று வெளியிட்ட செய்யுளில், 'அறிஞன் செவ்விய அறவுரை செவிவயின் உதவ அழகனும் வைகினன்' என்ற சொற்பிரயோகங்களை ஊன்றிப் பார்க்குமளவில் ஹிதபரமான வாக்கியங்களாயினும் வக்தா அறியாதவனாயின், கேட்போர்க்கு நம்பிக்கை பிறவாது; சொல்வோன் வல்லவனாயினும் விஷயந்தீதாயிற் சுரோதாக்களுக்கு மனப்பற்றாது; வக்தாவும் விஷயமும் சிறந்

திருப்பினுங் கேட்போரைப் பிணிக்குஞ் சொல்வன்மை இன்றெனிற் பயன்படாது என்னுங் கருத்துப் புலனும். அங்ஙனம் அடியேன் அறிஞனல்லேன், என் சொல் கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்லன்றாயினும், நம்மாழ்வார் விஷயம்சிறந்த தொன்றென்பதுபற்றி என்னை யாதரித்து ஆன்றோர் அருமொழிகளைப் புணர்த்தி யானெழுதிய இவ்விஷயத்தில் மனம் பற்றிக்கேட்டு, என் பிழை பொறுத்தருளுவர் பெரியோர்.

ஆழ்வார் வரலாறு.

பகவான் புறவிருளை ஒழிக்கப்பன்னிரண்டு ஆதித்யர்களைப் படைத்திருப்பது போல, அகவிருளைக் கழிக்கப் பன்னிரண்டு ஆழ்வார்களை அருளியுள்ளார். அவ்வாதித்யர் கடலுள்தோன்றி மறைவதுபோல் நமது கண்ணுக்குத் தோன்றுவர்; இவ்வாழ்வார்கள் பகவத்குணனுபவக் கடலுள்தோன்றி அதனுள் ஆழ்ந்து ஈடுபடுவார்கள். அவ் வாதித்யர் உதிப்பது உதயகிரி, மறைவது அஸ்தகிரி, சுற்றிவருவதுமேருகிரி; இவ்வாழ்வார்கள் என்றும் உதித்துவிளங்கிவிளக்குவது நிரதிசய ஆநந்தகிரி. உதயகிரிமுதலிய மலைகளிடத்துவிளங்கும்இருஷிகள் காய்இலைகளைத் தின்று காட்டில் உறைந்து தாமாக ஞானத்தைப் பெற முயல்வார்கள்; இவ்வாழ்வார்கள் எம்பெருமான் தானே தன்னைக் காட்டக்கண்டு, கொடுக்கக்கொண்டு பக்திவைராக்கிய ஞானங்களை எளிதாகப் பெற்று விளங்குவார்கள். அபௌருஷேயமான வேதம் இருஷிகள் மூலமாக வெளிவந்து சிலர்க்கு விலக்காக மறுக்கப்பட்டு அறத்தைத்தரும்; இவர்கள் அருளிய திவ்வியபிரபந்தம் யாவர்க்கும் ஒருங்கே வேதார்த்தங்களை உதவி, இவர்களுடைய வேத்திய ரகசியங்களை நமக்குப் போதித்து வாழ்வித்தருளும். இஃது நாமும் நம்முன்னோர்களும் செய்த தவப்பயன்.

ஆழ்வார்களுள் நம்மாழ்வாரோடு அவர் சிஷ்யரான மதுரகவியாழ்வாரையும், பெரியாழ்வாரோடு அவர் திருமகளாரான ஆண்டாளையும் சேர்த்துப் பதின்மர் ஆழ்வார்கள் என்று வழங்குவதினும் ஓர் எற்றம் உளது. அஃது நம்பெருமாள் துஷ்டர்

களை நிக்கிரகித்துச் சிஷ்டர்களைப் பரிபாலிக்க எடுத்தவை மச் சாதி தசாவதாரம்; நமது அஞ்ஞானத்தைக் களைந்து பெரு வாழ்வையளித்தற் பொருட்டு அவர் எடுத்தவை இத்தசாவதார மென்ப. (தொடரும்)

"சிவப்பிரகாசன்" தாசி மோகனம்.

(23-வது பக்கத்தொடர்ச்சி)

சிவப்பிரகாசம், அதுகண்டு சகியாதவராய், அழகியவல்லி யை நோக்கி, அடடா! இஃதென்ன பாபம். கையாலாகாத தற்கு மோகனமா காரணமென்றார். அழகியவல்லி வெட்கின வளேபோல் அப்படியா உங்கள் தேவியா! அஃதறியாது செய் தகாரியத்தைப் பொறுக்கவேண்டும். இனியான் ஏன் அவிழ்க் கிறேன். தாங்களே நோகாது அவிழ்த்துக் கொடுங்களென்றாள். அப்போதிவர் நினைத்ததாவது:— நம்முடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். அவளுகள் வந்தவுடன் தன்னை ஏன் கூப்பிட்டீர்க ளென்றால், நமக்கோ பதில் சொல்லமுடியாது விழிப்போம்; அவளுகளும் போய்விடுவாளுகள் அவ்விதமானால் பிரயோசன மற்றதாய்விடும். அப்படிக்கெல்லாமல்லாது, வந்து உட்கார்ந் ததோடு நம்மையும் உறவுபேசி, தலைஜோடிப்பைத் தொட்டு அவிழ்க்கும்படியான பாத்தியதையும் ஏற்படுத்திய இந்நன்றி யையென்றும் மறக்கக் கூடாதெனத் தனக்குள்ளே சிந்தித்துக் கொண்டு மெல்ல அவிழ்த்துக் கொடுத்தார்.

பின்பு தாம்பூலங் கொண்டுவரச் செய்து எல்லோரையும் உட்கார்ந்து போட்டுக்கொள்ளும்படிச் சொல்ல, அவர்களும் அவ்வாறே தாம்பூலம் போட்டுக்கொண்டிருக்கையில், பிள்ளை யைச் சாப்பிடுவதற்குக் கூப்பிடவந்தார்கள். இவருக்கோ பிரிந்துபோக மனமில்லாதவராய்ச் சாப்பிடக் கூப்பிடவந்தவ ரையழைத்து நீர்போய் ஓர் தவசுப்பிள்ளையை இவடம் வரும்ப டிச்செய்து உமது காரியத்தைப்பாரும் என்று சொல்லியனுப்

பிவிட்டார். அவ்வாறே ஓர் தவசுப்பிள்ளை வர, அவனுக்குத் தன்னிடமிருந்த ரூபாயில் சிலகொடுத்து, பத்து பெயருக்குக் காணும்படி போசனவகை, கறிவகை, பலகாரவகை, பழவகை, புத்துருக்கு நெய், கெட்டித்தயிர் முதலியயாவும் எடுத்துவரும் படிச் சொல்லியனுப்பினர். உடனே அவைகள் ஒருங்கே வந்து சேர்ந்தவுடன், அழகியவல்லி, மோகனம் வகையறுக்களுக்கும் ஏககாலத்தில் தாட்டிலைகளைப் போட்டுச் சாப்பிடச் செய் தார். தானும் அவ்விடத்தே விரைவில் தனது போசனத்தை யும் முடித்துக்கொண்டு இவர்கள் சாப்பிடும் இடத்திற்கு வந்து மிக்க அன்போடு உபசரித்தார். அறுசுவையோடு விலாப்பு டைக்க உண்டு அவர்கள் வரவே, உட்காரும்படிவேண்டி நல்ல வாசனையுள்ள அப்துல்ரஹிமான் சாயப்புக்கடையிலிருந்து வாங் கிவந்த சந்தனத்தைப் பூசிக்கொள்ளச் செய்தபின், லவண்டர் பாட்டில் 1, புனுகு, ஜவ்வாது, அரகஜா, அம்பர் இவைகளையு டைய தனித்தனி டப்பிகளை ஓர் தட்டில் வைத்தும் உயர்ந்த பன்னீரில் நனைக்கப்பட்டு வாசனைவீசும் கதம்பம், வெற்றிலை, பாக்கு வகையறுக்கள் முழுவதையும் மற்றொரு தட்டில்நிறைய வைத்தும் அவர்களிடம் கொடுத்தார்.

அக்காலை,ஜகந்நாதன் சொல்லுகிறான்.அழகியவல்லியம்மா! என்ன ஆச்சரியம் தங்கச்சி மோகனத்திற்கு எதுதெதில் பிரிய மோ அவைகளெல்லாம் சொல்லிவைத்தாற் போல், நிறைய விருக்கிறது. தவிரவும் தங்கச்சி கேளிக்கை யாடுகையில், எஜ மானைப்போன்றவர்கள் யெச்சி ஏதேனும் கொடுத்தால் அந்தச் செருவாட்டுப் பணத்தைக்கொண்டு, இதுபோன்ற சிலவாசனை திரவியங்களை வாங்கிவைத்திருப்பதுண்டு என்றான். அப்போது மோகனம் ஜகந்நாதனையும், அழகியவல்லியையும் உறுத்து ஆத்திரத்தோடு நோக்கிய பார்வையானது சண்டையிடுவாளெ ன்றே எண்ணத்தகும். பின் தனது முகத்தைத் திருப்பிச் சிவப்பிரகாசத்தைப் பார்த்து, என்னிடமிருந்த ரூபாய்களைத் தருவதாகச் சொல்லி நயபயத்தோடு வாங்கிவிட்டாளுகள். திரும்பக் கேட்கும்போதெல்லாம் அக்காளும் கொடுக்கவேயி ல்லை என்று விசனமுற்றாள். இதற்குள் காலங்காட்டுங் கருவி யும் மணி 11 அடித்தது. சிவப்பிரகாசமும் மோகனத்தைப் பயப்படாதே என்று தேற்றி தன் கையிலிருந்த ரூபாயை

அவள் கையிற்கொடுத்து, இன்னும் உனக்கு வேண்டியயாவும் தருகிறேனென, அவளும் அப்படியே இருகரத்தாலும வாங்கிக் கண்ணில் ஒத்திக்கொண்டு நமஸ்காரஞ் செய்தாள். உடனே அவரும் நாழிகையாகிறது, எல்லோரும வீட்டிற்குப் போய்வாருங்கள். மற்றவையாவும் நாளைபேசிக்கொள்வோம் என்றார்.

(தொடரும்)

S. T. விகடம்.

விசேஷக் குறிப்புகள்.

யாசகர்களுக்காக ஓர் பத்திரிகை.

பிரான்ஸ்தேசத்தில் பாரிஸ் நகரத்தில் பிச்சைக்காரர்களுக்காக ஓர் பத்திரிகை நடந்துவருகிறது. அப்பத்திரிகையில் உள்ள விஷயங்கள் யாசகர்களுக்கு அத்தியாவசியமானவை. தினந்தோறும் எங்கெங்கு குழந்தைகள் பிறந்து புண்யாஹவாசனமென்றும், விவாஹங்கள்எங்கெங்கென்றும், உத்தரக்கிரியைகள் எங்கெங்கு நடககின்றனவென்றும் அப்பத்திரிகையில் குறிக்கப்படும். தவிர தர்மசிந்தையுள்ள கனவான்கள் யார் யார் எப்பொழுது வருவார்களென்றும் குறிக்கப்படும். யாசகர்கள் அப்பத்திரிகைபடித்து, தங்கள் தொழிலைச்செவ்வனே நடத்துவதற்குச் சௌகரியமாயிருக்கிறது. யாராவது பாரிஸ் நகரத்துக்குச்சென்று ஏராளமான யாசகர்களால் சூழப்பட்டால், அக்கனவான்தான் ஒரு தாராள சிந்தையுள்ளவர் என்று அப்பத்திரிகையின் அதிகாரிகளால் குறிக்கப்பட்டிருப்பதாக நினைத்து திருப்தியடையலாமாம்.

லண்டன்மாநகரில் காவல்காக்கும் நாயைப் போன்றும் துப்பறியும் உத்யோகஸ்தன் போன்றும் வேலைசெய்யக்கூடிய இயந்திரமொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதனைப் பெட்டி முதலியவற்றுடன் பிணைத்துவைத்திருந்தால் திருடன் வந்து தொடுவானாகில் அது உரக்க மணியடித்துவெளிச்சமுண்டாக்கித்திருடன் உருவத்தைப்படம்பிடித்து விடுமாம். பெட்டியை வெகு லேசாகத் தொட்டாலும் இக்காரியங்கள் நிகழ்கின்றதோடும் இவ்வியந்திரம்நெருப்புக்கும் எச்சரிக்கையாக இருக்கின்றதாம்.

இமயாசலத்தின் சிகாமான கௌரிசங்கரைக்காண இன்னும் அறுநூற்றைம்பதடியே பாக்கியிருக்கிறதாம். இருபத்தெண்ணாயிரம் அடிவரை ஏறிவிட்டார்களாம்.

தென்மலையாளம் வடக்குக்காட்டூரிலிருந்து வலப்பாட்டைச்சுப் போகும் மார்க்கத்தில் பைங்நார் என்னுமிடத்தில் ஐந்துமாதகாலமாய்க் கீழே சாய்ந்திருந்த பெரிய ஆலமரமொன்று சில தினங்களுக்குமுன் ஒரு நாட்காலையில் தானே எழுந்து நிற்கிறதாம்.

ஆனந்தபோதினி.

இப்பத்திரிகைக்கு பத்தாவது வருடம் தொடங்கியது. நம் தாய்நாட்டில் தலைமை பெற்று விளங்குவதும் பல்லாயிரஞ் சந்தாதாரரையுடையதும் இதுவே.

உள்நாட்டிற்கு வருட சந்தா ரூ. 1—0—0
வெளிநாட்டிற்கு ,, 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சென்னை.

தெய்வபக்தன்.

மாதம் இருமுறை வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை.

தமிழ்நாட்டில் தேவஸ்தானம் முதலிய தர்மஸ்தாபனங்கள் இவற்றால் நம்மவர் அடையவேண்டிய நன்மைகளையும், அவற்றில் அவர்களுக்குள்ள சம்பந்தங்களையும், பிற அறிவு வளர்ச்சிக்கும் செல்வ விருத்திக்கும் ஏதுவான செய்திகளையும் பல அறிஞர்கள் எழுதிய வியாசங்கள் இதில் வெளிவரும். ஒவ்வொரு மதாபிமானி, தேசாபிமானிகளிடத்திலும் தவறாதிருக்கவேண்டிய பத்திரிகையாகும். வருஷசந்தா ரூ. 3—0—0

மானேஜர், தெய்வபக்தன், கும்பகோணம்.

கிராமாநுகூலன்.

ஒரு மாதாந்த தமிழ்ப் பத்திரிகை.

வருடசந்தா ரூபாய் இரண்டே.

கிராமங்களுக்கு வேண்டிய சகல விஷயங்களைப் பற்றி அனேக மேதாவிகளால் எழுதப்படும் அரிய வியாசங்களுடன் வெளிவரும் ஒரு சிறந்த மாதாந்த தமிழ்ப்பத்திரிகை. இம்மாதிரியான சஞ்சிகை தமிழில் இதுவரையில் கிடையாது. ஒவ்வொருவரும்தருவிக்கவேண்டிய தவசியமானது சாதாரணமாய் எல்லோரும் தருவித்து இப்பத்திரிகையைப் படிப்பதன் பிரயோஜனத்தைத் தெரிந்து நன்மையடையவேண்டு மென்றே மிகக்குறைந்த சந்தாவாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தயவு செய்து இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

மானேஜர், கிராமாநுகூலன் ஆபீஸ், கும்பகோணம்.

லோகோபகாரி.

இப்பத்திரிகை பிரதிவியாழன்தோறும் தோன்றித் தமது பெயருக்கேற்க உலகோர்க்குப் பல உபகாரமான கட்டுரைகளையுடையதாயும், பல அறிஞர்களாலும் நன்குமதிக்கப் பெற்றதாயும் உள்ளது.

அதன் வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ. 4—0—0
,, வெளிநாட்டிற்கு ரூ. 6—0—0

லோகோபகாரி பத்திரிகாலயம், சென்னை.

உ

ஓர் அறிவிப்பு.

பலரிடத்துங் குடிகொண்டு வாழவேண்டி, குறைந்த சந்தாவையுடையதாய், பல அரிய வித்வத்சிரோமணிகளால் பொது நலங் கருதி வரைந்து, அனுப்பியுள்ள குணநிறை கட்டுரைகளையுடையதாகி உலவிவரும் " குணநிதி " யின் எப்பொருளை நோக்கியேனும் எவருங்குணநிதியையுடையவர்களாகவேயிருப்பார்கள் என்பதை உலகோர் அறிந்ததே!!

பலர் தம்மிடத்துக் " குணநிதி " வந்தவுடன் அதன்முன்னேற்றத்தைக் கருதி, அதிலுள்ள குணத்தைக்கொண்டு அதன் நிதியை மணியார்டர் மூலமும், வி. பி. மூலமும்அனுப்புவதாக ஆர்டர்பாரத்தைப் பூர்த்திசெய்து அனுப்பி, நம்மையும் உத்சாகப் படுத்தியிருக்கிறார்கள், அன்னோர்களுக்கு நமது அன்பார்ந்த வந்தனத்தை அளிக்கிறோம்.

பிறநண்பர்களும் அங்ஙனமே செய்து, நம்மை உத்சாகப் படுத்துவதோடு தாமும் குணநிதியைய் யடித்துப் பலன்எய்துவார்களாக.

பத்திராதிபர்.

தேவை.

"குணநிதி" யை எங்கும், எவரிடத்தும் பரவச்செய்ய ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

உ

சிவமயம்.

நமது குணநிதிப் பிரசுரசாலையில் அடியிற்குறித்துள்ள செந்தமிழ் நூற்கள் விலைக்குக் கிடைக்கும்.

திருவிடைமருதூர் ஸ்தலபுராணம். (வசனம்) ரூ. 1—0—0

தொல்காப்பியம் பொதுப்பாயிரம் மூலமும் உரையும் (பழைய உரை) ரூ. 0—4—0

பத்திரஸ பைந்தமிழ்ப் பாசுரக்கீர்த்தனை. 0—4—0

குறிப்பு:— நமது சந்தாதாரர்களுக்கு மூன்று நூற்களும் ஒன்றேகால் ரூபாய்க்கே கொடுக்கப்படும்.

[வி. பி. செலவு பிரத்தியேகம்.]

Publisher:— M. S. Pichaiya Desikar, Thiruvidaimarudur.
Printer:— V. Srinivasa Thathachariar, S. K. Press, Kumbakonam.